2022 அக்டோபர் 18]

திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும்' என்பதற்கேற்ப, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களின் சார்பாக, இதயமார்ந்த நன்றியை தங்கள் மூலமாக நம்முடைய அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(வினா வரிசை எண் 10 எடுத்துக்கொள்ளப்பெறவில்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

சார்–பதிவாளர் அலுவலகம்

***10189—திரு. S. சதாசிவம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகத்தை பொதுப் பணித் துறைக் கட்டடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மேற்கு பதிவு மாவட்டத்திலுள்ள மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகம் 1980 ஆம் ஆண்டு முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 607 சதுர மீட்டர் நிலத்தை நிலமாற்றம் செய்வதற்கு, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் நில நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. நிலமாற்றம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு விரைவில் புதிய கட்டடம் கட்டப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூரில் 1981 ஆம் ஆண்டு வாடகைக் கட்டடத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் செயல்பட்டு வந்தது. இதுவரையில் அந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேட்டூரில் PWD–க்குச் சொந்தமான இடம் ஒதுக்கப்பட்டு, எழிலகத்தில் உள்ள நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் கோப்பு நிலுவையில் இருக்கின்றது. அந்த நிலத்தை நிலமாற்றம் செய்வதற்கான அனுமதியைப் பெற்று, நம்முடைய மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் புதிய கட்டடம் கட்ட வேண்டும். ஏனென்றால், மேட்டூரில் 100–க்கும் மேற்பட்ட. . .

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரலாறு வேண்டாம். புதிய கட்டடம் அங்கு கட்ட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இன்னொரு கேள்வி இருக்கிறது.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி வந்தவுடன் கட்டடம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள். இன்னொரு கேள்வி சுருக்கமாகக் கேளுங்கள் அல்லது நன்றி சொல்லுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான கேள்வி. இந்தியாவிலேயே நீங்கள் நடுநிலையோடு செயல்படுகிறீர்கள். நல்ல பேரவைத் தலைவராக இருக்கிறீர்கள். எனக்குப் பேசுவதற்கு 2 நிமிடங்கள் தாருங்கள். இது முக்கியமான துறை குறித்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப் பேசவிட்டு, எனக்கு அந்த certificate வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அதிகமான வருமானத்தை ஈட்டக்கூடிய துறை. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல அமைச்சர்.

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியின்போது, plot போடும்போது Panchayat Board approval இருந்தால் போதும் என்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தம்பி சதாசிவம், கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டீர்கள். கட்டித் தருகிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார். அதற்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டும். அதற்கு related ஆக ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் ஒரு இலட்சம் பேர் வசித்து வருகிறார்கள். அங்கிருந்து மேட்டூரில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு வர வேண்டுமென்றால், 25 கி.மீ. தொலைவு பயணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, கொளத்தூர் ஒன்றியத்திலும் புதிதாக பத்திரப் பதிவு அலுவலகம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, கோடிக்கணக்கில் இருக்கின்ற plots, approval செய்யப்படாமல் நிலுவையில் இருக்கின்றன. இதன்மூலம் செய்யப்படும் பத்திரப் பதிவுகளால் அரசுக்கு வருமானமும் வரும். பல கோடிக்கணக்கான துண்டு நிலங்கள் விற்க முடியாமல் இருக்கின்றன. Directorate of Town and Country Planning approval பெறப்பட வேண்டுமென்று 2018 ஆம் ஆண்டு ஆணையிடப்பட்டதால் கோடிக்கணக்கான துண்டு நிலங்கள் தமிழ்நாட்டில் விற்க முடியாத நிலையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களது கேள்வி பத்திரப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்பது. மாண்புமிகு அமைச்சர் சரியென்று சொல்லிவிட்டார். எனவே, நன்றி சொல்லுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். எங்களுடைய தலைவர் பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர், பாலக்கோட்டில் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் அதைக் கட்டிக் கொடுக்காமல் இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதையெல்லாம் நகராட்சி நிர்வாகத் துறையில் கொடுங்கள் அல்லது உள்ளாட்சித் துறையில் கொடுங்கள். இதற்கு தனிக் கேள்வி கேளுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வணிக வரித் துறைக்கு நல்ல மாண்புமிகு அமைச்சரைக் கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். நீங்கள் real estate குறித்து பேசுகிறீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்கு பதில் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கேள்வியை DTCP–ல் கேட்க வேண்டும். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி. அதை தனிக் கேள்வியாகப் போடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதை தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

பேருந்து நிறுத்தம்

***43331—திரு. ஜெ. கருணாநிதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்பேட்டிலிருந்து அசோக் நகர் வழியாக 100 அடி சாலையில் செல்லும் பேருந்துகள் முதலாவது மற்றும் மூன்றாவது அவென்யூ சந்திப்பில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?